# கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் - உயர் தரம்

# கிறிஸ்தவம்

## பாடத்திட்டம்

(2009 ஆம் ஆண்டிலிருந்து தரம் 12 இற்கும் 2010 ஆம் ஆண்டிலிருந்து தரம் 13 இற்குமானது)


**சமயக் கல்வித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

## 1.0 அறிமுகம்

சமய நெறியைப் புறக்கணித்துவிட்டு ஒழுக்க விழுமியங்கள் நிறைந்ததொரு சமூகத்தை எதுவிதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே சமயவிளக்கம் மிகவும் அத்தியாவசிய மான ஒன்றாக உள்ளது. இத்தகைய சமய விளக்கத்துடனான வாழ்வானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதன் இயல்பாகவே ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமொன்று உருவாகும்.

கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் இதுவரைகாலமும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கலைத்திட்டமானது, அத்தத்துவத்தைக் கடந்து தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்ட தத்துவத்துடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற்கிணங்க ஒரு கிறிஸ்தவன் தனது சமயத்தின் வழியாக எத்தகைய சமயத் தேர்ச்சிகளை தனது வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. அவ்வவ் தேர்ச்சிகளின் விருத்தியுடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய விதம் கவனத்திற்குரிய தொன்றாகின்றது. இதற்காகப் பொருத்தமான கற்பித்தல் நுட்பமுறைகளை உறுதிப்படுத்துகின்ற வகுப்பறைச் செயன்முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் ஒரு அலகு அல்லது பல அலகுகளை அடிப்படையாகக்கொண்டு ஆறாம் தரத்தில் எளிமையான அறிமுகத்துக்கும் பதினொராம் தரத்தை அடையும் போது இவ்வலகுகளில் கற்பிக்கப்படுகின்றவை பற்றிய ஓரளவு படிமுறை வளர்ச்சியைக் கொண்டதாக பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தரம் 11இல் பொதுக்கல்வியை முடித்துக்கொண்டு, சமய நெறியில் பல தேர்ச்சிகளை அடைந்து, தமது வாழ்வின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தமது கல்வியை முன்னெடுக்கும் மாணவர்களுக்காக தரம் 12, 13க்கான பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

திருவிவிலியத்தை ஆழமாகக் கற்று, திருச்சபையின் மறைக்கோட்பாடுகளையும், வளர்ச்சிகளையும், அதன் சமூக நோக்கையும் அறிந்து, நாட்டின் சமய, சமூக, கலாச்சார நலனுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் முதிர்ச்சியடைந்த, முழுமையடைந்த சீடத்துவ வாழ்க்கைக்கு தம்மை அர்ப்பணிக்க மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**பழைய, புதிய பாடதிட்டத்தின் வித்தியாசத்தைப் பின்வருமாறு அவதானிக்கலாம்.**

**பழைய பாடத்திட்டம்**

1. திருவிவிலியம் - பொது அறிமுகம்.
2. திருவிவிலியம் - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கற்றல்.
3. குலமுதுவர்களைப்பற்றி அறிதல்.
4. விடுதலைப்பயண நிகழ்ச்சியைக் கற்றல்.
5. திருவிவிலியத்தில் இறைவாக்கினர் பணி.
6. நான்கு நற்செய்திகளையும் ஆழமாகக் கற்றல்.
7. திருத்தூதர்பணி நூலைக் கற்றல்.
8. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு: ‘‘இன்றைய உலகில் திருச்சபை’’
9. திருத்தூதர் பவுலின் திருமுகங்களைக் கற்றல்.
10. உலகத் திருச்சபை வரலாற்றைக் கற்றல்.
11. இலங்கைத் திருச்சபை வரலாற்றைக் கற்றல்.

## புதிய பாடத்திட்டம்

1. திருவிவிலியம் உருவாகிய முறையையும் அதன் புவியியல் பின்னணியையும் தேடி அறிவர்.
2. ஐந்நூலில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தினதும் வரலாற்றுக் காலத்தினதும் விபரங்களைத் தேடி அறிவர்.
3. விடுதலைப்பயணம் வழியாக வரலாற்றில் இறைவனின் செயற்பாட்டை விளக்குவர்.
4. உடன்படிக்கை வாழ்வின் அர்த்தத்தை விளக்குவர்.
5. இறைவாக்கினரின் அழைப்பையும் முக்கிய படிப்பினைகளையும் தேடி அறிவர்.
6. கிறிஸ்துவின் கால அரசியல் பின்னணிகளையும் சமூகக் குழுக்களையும் பற்றிக் கற்பர்.
7. சமநோக்கு நற்செய்திகளின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குவர்.
8. மாற்கு நற்செய்தியின் பாஸ்கா மறைபொருள் பற்றிக் கற்பர்.
9. யோவான் நற்செய்தியில் பாஸ்கா மறைபொருளின் விசேட கருத்துக்களைக் கற்பர்.
10. திருச்சபையின் ஆரம்பம் வளர்ச்சி பற்றிய விபரங்களைக் கற்பர்.
11. ஐரோப்பாவில் திருச்சபை பிளவுபட்டமையை விபரிப்பர்.
12. உலகில் திருச்சபையின் பங்களிப்பை விளக்குவர்.
13. இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைக் கற்பர்.
14. மானிட, சமூக வாழ்வு பற்றியும், இன்றைய சமூகப் பிரச்சினைகள் பற்றியும், கிறிஸ்தவ ஒருமைப்பாடு பற்றியும் திருச்சபைப் படிப்பினைகளை விபரிப்பர்.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கம்

01. திருவிவிலியம் உருவாகிய முறையைத் தேடி அறிந்து, அதன் புவியியல், வரலாற்றுப் பின்னணிகளை அறிந்து கொள்ள வழிகாட்டுதல்.

02. திருவிவிலியத்தின் ஐந்நூலைக் கற்றறிந்து, இறைவனின் செயற்பாட்டை உணர்ந்து வாழ்வதற்குத் திட்டமிடல்.

03. இறைவனுக்கும் மனிதருக்குமிடையில் உள்ள உறவு உடன்படிக்கை வழியாகவும் இறைவாக்கினர் வழியாகவும் வெளிப்படுத்தப்பட்ட முறையை உணர்ந்து வாழ்வதற்குத் திட்டமிடல்.

04. நற்செய்தியை ஆழமாகக் கற்பதன் வழியாக முதிர்ச்சி பெற்றவராக கிறிஸ்துவுக்கு சான்று பகர உருவாக்குதல்.

05. நற்செய்தியில் வெளிப்படுத்தப்படும் பாஸ்கா மறைபொருளை தமது வாழ்வில் உரிமையாக்கிக் கொள்ளப் பழக்குவித்தல்.

06. திருச்சபையின் ஆரம்பத்தையும், பரம்புதலையையும் கற்றறிந்து, திருச்சபையின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யத் திட்டமிடல்.

07. திருச்சபையின் வளர்ச்சிக்காக தமக்கு ஏற்படும் சவால்களை கிறிஸ்தவ விசுவாச ஒளியில் எதிர்கொள்ளப் பழக்குவித்தல்.

08. இலங்கைத் திருச்சபை வரலாற்றைக் கற்று, தமது தேசிய கிறிஸ்தவத் தன்மைக்குச் சான்று பகரப் பழக்குதல்.

09. அருளடையாளங்களைப் பெற்று புதிய கிறிஸ்தவ நோக்குடன் வாழத் திட்டமிடல்.

10. மனித வாழ்வு, சமூக வாழ்வு, சூழல் ஆகியவற்றில் கிறிஸ்தவ நோக்குடன் தமது கடமைகளை நிறைவேற்றி மனித, சகவாழ்வை கட்டியெழுப்ப ஒத்துழைக்கச் செய்தல்.

11. பல் சமய சமூகத்தில் பொறுப்புடன் செயலாற்றி, சமயங்களிடையே ஒற்றுமையை வளர்க்கத் திட்டமிடல்.

## பாடசாலைத் தவணைக்கேற்ப பாடத்திட்டத்தை வகுத்துக்கொள்வதற்கான உத்தேசத்திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சிமட்டம் | பாடவேளை |
|---|---|---|---|
| 12 | 1 | 1.1 - 2.1 | 90 |
| | 2 | 2.2 - 4.1 | 110 |
| | 3 | 4.2 - 5.2 | 100 |
| 13 | 1 | 6.1 - 7.1 | 120 |
| | 2 | 7.2 - 8.3 | 100 |
| | 3 | 9.1 - 10.3 | 80 |

## 3.0 பாடத்திட்டம்

## 3.1 தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட |
|---|---|---|---|
| **1.0 திருவிவிலியத்தைத் தகுந்த முறையில் விளங்கி, அதன் இயல்பைக் கற்று, அதன் அடிப்படையில் வாழ்வர்.** | 1.1 திருவிவிலியம் உருவாகிய முறையைத் தேடி அறிவர். | ● திருவிவிலியம்<br>பெயர்<br>உள்ளடக்கம்,<br>பிரிவுகள்<br>● வாய் மொழிப் பாரம்பரியம்.<br>எழுத்துவடிவப் பாரம்பரியம்<br>ஆசிரியத்துவம்<br>இறை ஏவுதல்<br>இணைத்திருமறை நூல்கள் | 26 |
| | 1.2 திருவிவிலிய உருவாக்கத்தில் புவிவியியல் வரலாற்றுப் பின்னணி களைத் தேடி அறிவர். | ● புவியியல் பின்னணி<br>● வரலாற்றுப் பின்னணி<br>◆ விடுதலைப்பயணம்<br>◆ நீதித்தலைவர்கள்<br>◆ அரசர்கள்<br>◆ அரசு பிரிதல்<br>◆ அடிமைத்தனம்<br>◆ அடிமைத்தனத்தின் பின்னர் | 34 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **2.0 திருவிவிலியத்தின் ஐந்நூலில் வெளிப்படும் இறைத்திட்டம வழியாக தம் வாழ்வில் இறைத் திட்டம் செயற்பட இடமளிப்பர்.** | 2.1 மீட்பு வரலாற்றுக்கு முற்பட்ட காலம், மீட்பு வரலாறு வழியாக ஐந்நூலைக் கற்றறிவர். | ● ஐந்நூல் உருவாக்கம் (JEDP பாரம்பரியங்கள்)<br>● படைப்பு (தொடக்கநூல் 1-3 அதிகாரங்கள்)<br>● குல முதுவர்கள்<br>◆ ஆபிரகாம்<br>◆ ஈசாக்<br>◆ யாக்கோபு<br><br>◆ அழைப்பு<br>◆ உடன்படிக்கை<br>◆ நம்பிக்கை (விசுவாசம்) | 30 |
| | 2.2 விடுதலை (மீட்பு) வழியாக இறை செயற்பாட்டை விளக்குவர். | ● மோசேயின் அழைப்பு<br>● பத்துப் பெரும் துன்பங்கள்<br>● யூத பாஸ்கா<br>● செங்கடலைக் கடத்தல்<br>● பாலைவனப் பயணம் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
| --- | --- | --- | --- |
| **3.0 இறைவன் தம் மக்களுடன் ஏற்படுத்திய உறவை அறிந்து இறை செயல்பாட்டை உணர்ந்து கொள்வர்.** | 3.1 இறைவன் தம் மக்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையைக் கற்றறிவர். | ● சீனாய் உடன்படிக்கை (யாத். 19-24 அதிகாரங்கள்)<br>● உடன்படிக்கையும் இஸ்ராயேல் மக்களும் | 20 |
| | 3.2 இறைவாக்கினரின் அழைப்பையும் முக்கிய படிப்பினைகளையும் தேடி அறிவர். | ● அறிமுகம்<br>● கருப்பொருள்<br>◆ அழைப்பு (எசாயா, எரேமியா, எசெக்கியேல்)<br>◆ மெசியா படிப்பினை (எசாயா, மீக்கா)<br>◆ துன்புறும் ஊழியன்<br>◆ எதிர்பார்ப்பு<br>◆ சமூகப் படிப்பினை (ஆமோஸ்)<br>◆ உடன்படிக்கை | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **4.0 நற்செய்திகளைக் கற்பதன் வழியாக கிறிஸ்துவின் உறவில் வாழ்வர்.** | 4.1 கிறிஸ்துவின் கால அரசியல், சமூக பின்னணிகளையும் சமூகக் குழுக் களையும் அறிந்து கொள்வர். | ● அரசியல் பின்னணி<br>● சமூகப் பின்னணி<br>● சமயக் குழுக்கள்<br>◆ பரிசேயர்<br>◆ சதுசேயர்<br>◆ ஏரோதியர்<br>◆ சமாரியர்<br>◆ எசேனியர்<br>◆ பிற இனத்தவர் | 20 |
| | 4.2 சமநோக்கு நற்செய்திகளில் ஒற்றுமை வேற்றுமைகளை பட்டியல்படுத்துவர். | ● நோக்கம்<br>● ஆசிரியம், காலம்<br>● சமநோக்குப் பிரச்சனை<br>● மலைப்பொழிவு<br>● இறை அரசு<br>◆ உவமைகள்<br>◆ புதுமைகள் | 34 |
| | 4.3 யோவான் நற்செய்தி பற்றிய விசேட அறிவு பெறுவர். | ● மூலங்கள்<br>● ஆசிரியம்<br>● காலம்<br>● நோக்கம்<br>● அருங்குறிகள் | 16 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **5.0 மீட்பின் முக்கிய நிகழ்வாகிய பாஸ்கா மறைபொருளை அறிந்து தமது வாழ்வில் வெளிப்படுத்துவர்.** | 5.1 பாஸ்கா மறைபொருள் பற்றி மாற்கு நற்செய்தியின் அடிப்படையில் ஆராய்வர். | ● பாடுகளின் முன்னறிவிப்பு<br>● பாடுகள்<br>மரணம்<br>உயிர்ப்பு | 20 |
| | 5.2 யோவான் நற்செய்தியின்படி பாஸ்கா மறைபொருளின் விசேட கருப்பொருளை ஆராய்ந்தறிவர். | ● பாதம் கழுவுதல்<br>● இயேசுவின் வேண்டல்<br>(அதிகாரம் 17 உன்னத குருவின் செபம்)<br>● தீர்ப்பிடல், மரணம்<br>● உயிர்ப்பு<br>● தூய ஆவி | 30 |

## 3.2 தரம் 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **6.0 பல நூற்றாண்டுகளாக இடம் பெற்ற திருச் சபையின் வளர்ச்சியை இனங்கண்டு இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்காளிகளாவர்.** | 6.1 திருச்சபையின் ஆரம்பகாலம் பற்றிய விடயங்களைத் தெரிந்து கொள்வர். | ● திருச்சபையின் ஆரம்ப காலம்<br>◆ தூய ஆவியின் வருகை<br>◆ யூத பின்னணிக் காலத்தில் கிறிஸ்தவம்<br>◆ திருச்சபையின் விசேட பண்புகள்<br>◆ ஜெருசலேம் பொதுச்சங்கம்<br>◆ புனித ஸ்தேவான்<br>◆ திருச்சபையின் வளர்ச்சி<br>● புனித பவுலின் மறைதூதுப் பயணங்கள்<br>● புனித பவுலின் முக்கிய படிப்பினைகள்<br>◆ இறை அருள்<br>◆ கிறிஸ்துவின் தலைமைத்துமும் தாழ்ச்சியும்<br>◆ உயிர்ப்பும் மறுவருகையும்<br>◆ குடும்ப வாழ்வு<br>◆ சகோதரத்துவமும் ஒற்றுமையும்<br>◆ தூய ஆவியின் கனிகளும் கொடைகளும் | 50 |
| | 6.2 திருச்சபைத் தந்தையர்களின் காலத்தில் திருச்சயையின் வளர்ச்சியை ஆராய்வர் | ● முக்கிய திருச்சங்கங்கள்<br>◆ நிசேயா<br>◆ கொன்ஸ்தான்திநோபிள்<br>◆ எபேசு<br>◆ கல்சதோன்<br>● திருச்சபைத் தந்தையர்கள் (புனித ஜஸ்டின், புனித அந்தனாசியார், புனித ஜெரோம், அலெக்சாந்திரியாவின் புனித சிறில், புனித அகஸ்டின், புனித ஒரிஜன், புனித தேத்தூலியன்) | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 6.3 ஐரோப்பாவில் முதன் முதல் திருச்சபை பரவியமை பற்றிய வரலாற்றை விளங்கிக் கொள்வர். | • ஐரோப்பாவில் திருச்சபை வளர்ச்சியடைதல் (5-9 நூற்றாண்டு வரை)<br>• மத்திய காலம் (10-12 நூற்றாண்டு) | 20 |
| **7.0 ஐரோப்பாவில் திருச் சபை எதிர் கொண்ட சவால்களும் அவற்றை வெற்றி கொண்ட விதத்தையும் கற்ப தோடு விசுவாசத்தை உறுதி செய்வர்.** | 7.1 ஐரோப்பிய திருச்சபை பிளவுபட்டமை பற்றிய விடயங்களை அறிந்து கொள்வர். | • திருச்சபை பிளவுபட்டமைக்கான பின்னணி<br>• மாட்டின் லூதரின் புரட்சி<br>• கல்வின், சுவிங்கிலி<br>• எட்டாவது ஹென்றி அரசன் | 30 |
| | 7.2 உலகியல் கொள்கையின் எழுச்சியையும் திருச்சபையின் செயற்பாடுகளையும் விபரிப்பர். | • புனரமைப்பும் மறுமலர்ச்சியும் (கி.பி. 1500-1750 வரை)<br>• நவீன காலம் (1750 முதல்) | 20 |
| | 7.3 உலகில் திருச்சபையின் பங்களிப்பை விளங்கி மக்களின் முன்னேற்றத்துக்காக தம்மை அர்ப்பணிப்பர். | • கல்வி<br>• விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்<br>• கலைகள் | 10 |
| **8.0 இலங்கைத் திருச் சபையின் வரலாற்றைக் கற்பதோடு இலங்கை கிறிஸ்தவ திருச் சபையை இனங் கண்டு சாட்சியம் பகர்வர்.** | 8.1 ஐரோப்பியர் காலத்தில் இலங்கைத் திருச்சபையின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் விளக்குவர். | • போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலம்<br>• போர்த்துக்கேயர் காலம்<br>• ஒல்லாந்தர் காலம்<br>• ஆங்கிலேயர் காலம் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | 8.2 சுதந்திர இலங்கையில் திருச்சபை தொடர்பான விடயங்களை அறிந்து அதற்கேற்ப செயற்படுவர். | ● சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகள்<br>● இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் தாக்கங்கள்<br>● தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபை | 30 |
| | 8.3 இலங்கைச் சமூகத்தில் திருச்சபையின் பங்களிப்பை விளக்குவர். | ● கல்வி<br>● பண்பாடும் கலைகளும்<br>● சமூகப் பணிகள் | 10 |
| **9.0 கிறிஸ்தவ திருவழிபாட்டில் பங்கு பற்றுவதன் வழியாக கிறிஸ்தவ வாழ்வு வளர்ச்சியடைகிறது என்பதை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பர்.** | 9.1 விசுவாசத்தை வளர்க்க திருவழிபாட்டின் பங்களிப்பை ஆராய்வர் | ● தொடக்க கால கிறிஸ்தவ குழுவும் திருவழிபாடும்<br>● கீழைத் தேய சபைகளின் திருவழிபாட்டு ரீதிகள்<br>● மேலைத் தேய சபைகளின் திருவழிபாட்டு ரீதிகள் | 12 |
| | 9.2 அருளடையாளங்களைப் பெறுவதன் முக்கியத்துவத்தை விளக்குவர் | ● கிறிஸ்து அருளடையாளங்களின் மையம்<br>● திருமுழுக்கு அழைப்பு<br>● நற்கருணையும் ஒற்றுமையும் | 20 |
| | 9.3 புதிய கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தூய ஆவியின் முக்கியத்துவத்தை விளக்குவர். | ● உலகில் தூய ஆவியின் செயற்பாடு<br>● தூய ஆவியும் சான்று பகரலும் | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **10.0 நவீன சமூக போராட்டங்களின் மத்தியில் மனித நேயத்துடன் செயற்படுவர்.** | 10.1 மானிட, சமூகவாழ்வு பற்றிய கிறிஸ்தவ சிந்தனையை விளக்குவர். | ● மனித மாண்பு<br>● பெண்களும் கிறிஸ்தவ சிந்தனையும்<br>● மனிதனின் சமூகவாழ்வு<br>● மனித வளர்ச்சியும் கிறிஸ்தவ பங்களிப்பும் | 16 |
| | 10.2 தற்கால சமூக முரண்பாடுகளையும் கிறிஸ்தவர்களின் பொறுப்பையும் பற்றி விளங்கிக் கொள்வர். | ● முரண்பாடுகளைக் களைதலும் அமைதியைப் பேணலும்<br>● சூழல் பாதுகாப்பும் கிறிஸ்தவனின் பொறுப்பும் | 08 |
| | 10.3 கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகவும் பல்வேறு சமயங்களுடன் சகவாழ்வுக்காகவும் மிகப் பொறுப்புடன் செயற்படுவர். | ● இலங்கையில் முக்கிய கிறிஸ்தவ சபைகள்<br>● கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான உரையாடல்<br>● பல்வேறு சமயங்களுக்கு மத்தியில் நல்லுறவு | 12 |

## 4.0 கற்றல் - கற்பித்தல் செயன்முறை

திருமறை அறிவானது, இறை - மனித உறவின் அடிப்படை அனுபவத்தில், மனித - மனித உறவின் முதிர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் இன்றியமையாததொன்றாகும். திருமறை, அறிவோடு மட்டும் முடிந்துவிடும் விடயம் அல்ல; அது ஒரு வாழ்க்கை முறை. திருமறை அறிவைத் தகுந்த மனப்பக்குவத்துடன் பெற்று, அதைத் தமது வாழ்க்கை அனுபவமாக்குவது முக்கியமானதாகும்.

இத்தகைய வாழ்க்கை அனுபவத்தை குடும்பத்திலும், பாடசாலையிலும், சமூகத்திலும் பெற்றுக் கொள்வதற்கும், திருச்சபையினதும் சமூகத்தினதும் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்வதற்கும் பல்வேறு அணுகுமுறைகளை மாணவர்கள் கையாள வேண்டும்.

தரம் 12,13 வகுப்புகளில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும் மாணவர்கள் தமது எதிர்கால தொழில்சார் வாழ்கை நிலைகளைத் தெரிவு செய்யும் எதிர்நோக்குடன் செயற்படுகின்றனர். தொழில்சார் நிலைகளைத் தெரிவு செய்யத் திட்டமிடும் மாணவர்கள் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராகத் தீர்மானங்கள் எடுக்கவும், அறநெறிவாழ்வை வாழவும், நற்பிரஜைகளாக தமது கடமைகளை நிறைவேற்றவும் வழிநடத்தப்படவேண்டும்.

தரம் 12,13 வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தில் தேர்ச்சிகளும், தேர்ச்சி மட்டங்களும் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை மையமாகக் கொண்டுள்ளன. பல்வேறு அணுகுமுறைகள் செயற்திட்டங்கள் வழியாக எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை மாணவார்கள் அடையச் செய்வது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- எண்ணக்கருப் படங்கள்
- செவ்வி காணல்
- பொருட்காட்சி
- விவாதம்
- குழுக் கலந்துரையாடல்
- கருத்தரங்கு
- உடனடிப் பேச்சு
- நடிபங்கு
- புத்தகங்கள், கட்டுரைகள் பற்றிய விமர்சனங்கள்
- களப்பிரயாணங்கள்
- வதிவிடத் தியானங்கள், வழிபாடுகள்.
- சமூக நோக்குச் செயற்றிட்டங்கள்.
- விரிவுரைகள்

## 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

- வருடத்திற்கு ஒரு தடவையாவது வதிவிட தியான நிகழ்வை ஏற்பாடு செய்து, மாணவர்களைச் செயற்பட ஊக்குவித்தல்.
- பாடசாலைத் தவணை ஒவ்வொன்றிலும், குறைந்தது ஒரு நாள், திருப்பலி ஏற்பாடு செய்து, மாணவர்களைப் பங்கு பெறச் செய்தல்.
- மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக, பங்குக் குருவினதும் துறவியரதும் உதவியைப் பெறல்.
- பாடசாலையில் மாணவர்களுக்கான கழகங்களை எற்படுத்தி, மாணவர்களை அவற்றில் அங்கத்தவராக்கி, அவர்கள் வாழ்வு வளமடைய வழிகாட்டல்.
- பாடசாலையில் கலாச்சார விழாக்களை அர்த்தமுள்ள முறையில் ஏற்பாடு செய்தல்.
- குழுக்களாக இறைவார்த்தையை வாசித்தல், கற்றல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்.
- இரக்கச் செயல்கள் செய்யும் சபைகளுக்கு உதவி புரியவும், அவற்றில் உறுப்பினராகச் சேரவும் ஊக்குவித்தல்.
- பாடசாலையில் மாணவரது நலனை வளர்த்து, தேவையிலிருக்கும் மாணவர்கள் மட்டில் அக்கறை கொள்ள வழிகாட்டல்.
- பாடசாலையில் சகோரத்துவம், ஒருமைப்பாடு, சகவாழ்வு, ஆகிய விழுமியங்களைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு வழிகாட்டல்.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் என்பன உள்ளடங்கும் விதத்தில் கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம் - 13 இன் இறுதியில் இடம் பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான க.பொ.த. உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் நடத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.